(*c*) the steps taken by the Government to collect the money thus deposited?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Funds for opening Poormen depots were collected by non-official committees of local people. No money was collected from the public by Collectors or Tahsildars to open poormen depots, *except in* Coimbatore district where in one taluk, viz., Dharapuram, the Tahsildar had raised public contribution for the purpose, out of which a balance of Rs. 106·81 nP., is still available with interest.

(*b*) The balance amount of Rs. 3,007–8–2 with interest of Rs. 28 was drawn from the Urban Bank, Uthamapalayam, and was handed over to Sri S. Thiagaraja Mudaliar, one of the members of the Committee for utilizing it for a building of the Board High School, Uthamapalayam, as per resolution, dated 29th June 1947, of the Committee.

(*c*) Does not arise in view of the answer to (*b*) above.

SRI N. R. THIAGARAJAN : நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது, போர்டு ஹைஸ்கூல் கட்டிடம் கட்டுவதற்காக அந்தப் பணத்தைக் கொடுக்கும்படி அவர்களைக் கேட்டதற்கு, அத்தகைய பணம் தங்களிடம் இல்லை என்று அவர்கள் கூறிவிட்டார்கள். அதற்கு முன்பே பல முறை பொதுமக்கள் கேட்டும், பணத்தைச் சரியான முறையில் உபயோகம் செய்யவில்லை. போர்டு ஹைஸ்கூலுக்கென ஒதுக்கிய நிதியை ஜில்லா போர்டு வசம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸ்கூல் விவகாரத்தைப் பற்றித் தனியாக கனம் கல்வி அமைச்சருக்கு கேள்வி போட்டால் அதற்கு அவர் பதிலளிக்கலாம்.

Villages without Schools in Coimbatore District.

9–10 a.m. * 633 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமங்கள் எத்தனை ?

(ஆ) இக் கிராமங்களிலே கல்வி கற்கத் தகுந்த வயதடைந்தவர்களின் எண்ணிக்கை எத்தனை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There is no village in Coimbatore District with a population of 500 and above in which there is no school.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : அநேகமாக, 500-க்குள் குறைவான ஜனத்தொகையுள்ள கிராமங்களில்தான் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படவில்லை. அந்த கிராமங்களிலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஒவ்வொரு சிறிய ஊரிலும் பள்ளிக்கூடம் அமைத்தால், அவைகளுக்கு அங்காங்கே போதிய மாணவர்கள் இருக்கமாட்டார்கள். பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை அமைத்தால், அவைகளுக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள பிள்ளைகளும் அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் போகமுடியும். எனவே பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டுமென்று சர்க்கார்

30th September 1958]

அபிப்பிராயப்படுகிறது. அவ்வாறே பெரிய கிராமங்களில் பள்ளிக்கூடங்களை சர்க்கார் அமைத்து வருகிறது. அவ்வாறு அமைக்கும்போது, சிறு குழந்தைகள் அவர்களுடைய வீடுகளிலிருந்து பள்ளிக்கூடங்களுக்குப் போகும்போது நடக்கவேண்டிய தூரம் ஒரு மைலுக்கு மேற்படாமல் இருக்கும் முறையில் அவைகளை அமைப்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

Primary Health Centres.

* 634 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1957–58-ல் தஞ்சை ஜில்லாவில், தாலூகாவாரியாக, திறக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : A paper [a] is placed on the table of the House.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்தப் பதிலைப் பார்க்கும் போது, ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமாக இல்லை என்று தெரிகிறது. அது ஒரு புறமிருக்க, ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்களில் வேலை பார்க்கும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் ஒரு இலாகாவைச் சேர்ந்தவர்களாகவும், டாக்டர்கள் வேறொரு இலாகாவைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள் ; இதன் காரணமாக, அந்த நிலையங்கள் சம்பந்தமாக ஏதாவது குறைகூறப்படும்போது இரு உத்தியோகஸ்தர்களும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுகிறார்கள். எனவே, இந்த இரு இலாகாக்களையும் ஒரே இலாகாவின் கீழ் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்களில் ஒரு திட்டப்படி வேலை நடக்கிறது. எதை மாற்ற வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கூறுகிறார் என்று எனக்கு இன்னும் சரியாக விளங்கவில்லை. ஆகையால் கனம் அங்கத்தினர் தாம் கூறுவதை எனக்கு எழுதி அனுப்பினால், கவனிக்கிறேன்.

Irrigation tanks

* 635 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the starred question No. 268, on 10th March 1958 the nature of further action taken in the matter of providing irrigation tanks for the villages of Kanthadu and Kottikuppam in the Tindivanam taluk, South Arcot district?

THE HON. SRI P. KAKKAN : The Executive Engineer, South Arcot Division, has sent two estimates to the Collector of South Arcot district for his concurrence regarding the food value and the additional revenue for the formation of two tanks in Kottikuppam village and one tank in Kanthadu village. The Collector has referred the matter to the Assistant Collector, Tindivanam. The Collector is awaiting the report from the Assistant Collector for according his concurrence.

SRI M. JAGANNATHAN : கொட்டிக்குப்பம், காந்தடு கிராமங்களில் நீர்ப்பாசன வசதி அளிக்கக்கூடிய ஏரிகள் இல்லாததால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஏரிகளை அமைக்கும் வேலைகளை துரிதமாகச் செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருவார்களா ?

---

[a] Printed as Appendix II on page 1125 infra.